தமிழாற்றுப்படை

வைரமுத்து

பாரதிதாசன்

17

வெற்றிடத்தைக் காற்று நிரப்பும் என்பது விஞ்ஞானம். காலத்தின் வெற்றிடத்தை ஒரு கவிஞனைக் கட்டமைத்து நிரப்பும் சமூக இயங்கியல்.

அப்படிக் காலத்தின் வெற்றிடத்தை நிரப்ப வந்த கவியாகத்தான் பாவேந்தர் என்ற பேராளுமையை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

அவர் வினைப்பட்ட காலத்தின் வெளிச்சத்தைக் கொண்டு காண வேண்டும் அவரது பெருமையின் திருமுகத்தை.

'தமிழனுக்குத் தேசியமென்றால் இந்தி; அனைத்துலக மொழியென்றால் ஆங்கிலம்; இசையென்றால் தெலுங்கு; வழிபாடு என்றால் வடமொழி; அடுக்களையில் கூட அருந்தமிழ் ஆட்சி செலுத்துமா என்பது கேள்விக்குறி' இது ஆர்.கே.சண்முகம் செட்டியாரின் அற்றைநாள் படப்பிடிப்பு.

மொழியென்பது வெறும் கருவிதானே! பொருள் சுட்டும் ஒலிக்கூட்டம்தானே! இதில் என்ன இருக்கிறது என்று கேட்டாரும் கேட்பாரும் உளர்.

அது சரியில்லை.

மொழி அளாவிய எல்லை வரையில்தான் நிலமிருக்கிறது. நிலம் அளாவிய எல்லை வரையில்தான் இனமிருக்கிறது. மொழி முடியுமிடத்தில் இனம் முடிந்துபோகிறது. ஆகவே மொழிதான் இனம்; மொழிதான் நிலம்.

கால்டுவெல்லும் பேராசிரியர் சுந்தரம்பிள்ளையும் மறைமலையடிகளும் முன்னெடுத்தோடிய இந்த முதற்சுடரைத் தீப்பந்தமாய்க் கொளுத்திக்கொண்டது திராவிட இயக்கம். அந்தத் தீப்பந்தத்தின் இலக்கியக் கொழுந்தாய் எரிய வந்தவரே பாரதிதாசன்.

அரசு - ஆலயம் - அதிகாரமையம் - அன்றாடம் எல்லாம் பிறமொழிவயப்பட்டதில் தமிழை இழந்து நின்றது 'மெட்ராஸ் பிரசிடென்ஸி'.

தமிழே வடமொழியின் குழந்தைதான். அதனால் இருந்துவிட்டுப் போகட்டுமே என்று எண்ணியாரும் இருந்தனர் அன்று. ஆனால் தமிழ் என்பது பிறமொழியின் வார்ப்பன்று; திராவிடத்தின் மூலக்கூறு என்ற ஆராய்ச்சி முடிவுதான் தமிழ்தேசிய விடுதலைக்கே வித்திட்டது.

திராவிடத்திலிருந்தே தமிழ் பிறந்தது என்றார் கால்டுவெல்.

"த்ரவிட → திரமிட → திரமிள → தமிள → தமிழ்"

இல்லை; தமிழிலிருந்தே திராவிடம் பிறந்தது என்றார் மறுசாரார்.

"தமிழ் → தமிள → த்ரமிள → த்ரமிட → த்ரவிட"

இவ்விரண்டில் ஏதொன்று ஏற்புடைத்தாயினும் தமிழ் வடமொழிச் சார்பில்லாதது என்பது பெறப்படும். பிறகு ஏன் தமிழ் தன் அதிகாரமிழந்து அடையாளமிழந்து வடமொழி ஆதிக்கத்தில் வதைபட வேண்டும்?

சுதந்திரம் என்பது பொருளாதார விடுதலை; மொழி விடுதலைதான் இன விடுதலை. எனவே, மொழியை மீட்டெடு; மொழியிலிருந்து கட்டமைக்கப்பட வேண்டும் தமிழ் தேசியம்.

காலத்தின் இந்தக் குரலைத் தன் கவிதையில் வாங்கி ஓங்கி ஓதிய ஒரு தனிப்புலவர் பாவேந்தர் பாரதிதாசன்.

"ஒண்டமிழ்த்தாய் சிலம்படியின்
முன்னேற்றம் ஒவ்வொன்றும்
உன்முன் னேற்றம்
கண்டறிவாய் எழுந்திரு நீ
இளந்தமிழா கண் விழிப்பாய்
இறந்தொ ழிந்த
பண்டைநலம் புதுப்புலமை
பழம்பெருமை அனைத்தையும் நீ
படைப்பாய் இந்நாள்
தொண்டுசெய்வாய் தமிழுக்குத்
துறைதோறும் துறைதோறும்
துடித்தெ ழுந்தே!"

என்ன ஒரு யாப்புச் செப்பம்! நரம்புகளில் நாணேற்றும் சொற்கள்! பனிக்கட்டி மீது உருண்டோடும் ஆப்பிள்போன்ற தடையற்ற ஓட்டம்; காலத்தைத் தூக்கி நிறுத்தும் கருத்து. இதை வாய்விட்டு வாசிக்கும் போதெல்லாம் 12 வயதில் நான் உற்ற அதே உணர்ச்சியை எழுச்சியை இன்றும் அடைகிறேன்.

எழுதப்பட்டு முக்கால் நூற்றாண்டுக்குப் பிறகும் இந்தக் கவிதையின் தேவை தீரவில்லை இன்னும்.

தமிழ் இலக்கியத்தின் நீண்ட வரலாற்று நெடுங்கணக்கில் பாரதிதாசனைப்போல் முரண்பட்ட இரு ஆசான்களைக்கொண்ட கவி அதற்குமுன் இல்லை.

ஓர் ஆத்திகப் பெருங்கவிஞனும் ஒரு நாத்திகப் பெருந்தலைவனும் உனக்கு ஆசான்களாகத் திகழ்வார்கள் என்று காலம் கவிஞனுக்குக் கட்டளையிட்டது.

'மகனே! எட்டயபுரத்தில் கவிதையெடுத்துக்கொள்; ஈரோட்டில் கருத்தை எடுத்துக்கொள்' என்று காலம் திரட்டிக்கொடுத்த திருப்பொருள்கொண்டு தமிழ் தேசியத்தைக் கட்டமைக்கப் பிறந்த கவிதா மேதைதான் பாவேந்தர் பாரதிதாசன்.

இந்திய தேசியத்தை பாரதி கட்டமைக்கக் கருதியதைப் போல் தமிழ் தேசியத்தை பாரதிதாசன் வடிவமைக்கத் துடித்தார். பாரதி மீது அவர் வைத்திருந்த பற்று இறுதி மூச்சுவரை இற்றுப்போகாதது.

பக்கத்திலிருக்கும் வெளிச்சத்தில்தான் படிக்க முடியும் என்பதுபோல அருகிலிருக்கும் ஆளுமைகளே இன்னோர் ஆளுமையை உண்டாக்குகிறார்கள்.

இராமலிங்க அடிகளாரும் மாயூரம் வேதநாயகம் பிள்ளையும், கோபாலகிருஷ்ண பாரதியும், பாரதியாருக்கு உந்து சக்தியாய் வாய்த்ததுபோல் பாரதியாரும் பெரியாரும் மறைமலையடிகளும் பாரதிதாசனின் வார்ப்புக்குக் காரணமானார்கள்.

பாரதியாரைவிட இலக்கணம் கற்ற பாரதிதாசன், கவிதையைக் கற்றுக்கொண்டது பாரதியாரிடம்தான். இதை பாரதிதாசனின் கூற்றாகவே இங்கு பதிவு செய்கிறேன்:

"அவரெழுதிய கையெழுத்துப் படிகள் அங்குமிங்குமாகக் கிடக்கும். ஒருநாள் அவர் எழுதும் விசிப்பலகை டிராயரை இழுத்துப் பார்த்தபோது 'பாஞ்சாலி சபதம்' என்ற கையெழுத்துப்படி இருந்தது. அதை எடுத்துப் படித்துப் பார்த்தேன். பாடல்கள் மிக எளிமையாகவும் புரியும் படியும் இருந்தன. அதேசமயம் மிகச் சுவையாகவும் இருந்தன. இப்படி எளிதில் புரியும்படியான கவிதையை நான் பார்த்ததில்லை. புரியும்படி எளிதாகக் கவிதை எழுதமுடியும் என்றும் நான் நினைத்ததில்லை. அக் கையெழுத்துப்படி என் கவிதைப்போக்கில் பெரிய மாறுதலை உண்டாக்கியது. 'சுப்பிரமணியர் துதியமுது' எழுதிய சுப்பு ரத்தினத்தைப் பாரதிதாசனாக்கியது".

பட்டுக்கோட்டையிலிருந்து ஒருகுரல் பாரதிதாசனைச் சாடியது. "அது என்ன பாரதிதாசன்? 'பாரதி' ஒரு பார்ப்பனர். 'தாசன்' என்பது வடசொல். அதற்கு 'அடிமை' என்று பொருள். அப்படியானால் பாரதிதாசன், பாரதி என்ற பார்ப்பனருக்கு அடிமையா? இது கேள்வி". 'ஆமாண்டா, நான் பாரதிக்கு அடிமைதான்' - இது பாரதிதாசனின் பதில். பாரதிதாசனின் இந்த நேர்மை எப்போதும் பிடிக்கும் எனக்கு.

விமர்சனங்களை ஒரு கவிஞன் எப்படி எதிர்கொள்கிறான்; ஏற்றுக்கொள்கிறான் என்பதே அவனது வளர்ச்சி.

மற்போரிலும் சொற்போரிலும் மிக்கவராய்த் திகழ்ந்த பாரதிதாசன் ஆக்கபூர்வமான விமர்சனங்களை ஏற்றுக்கொள்ள ஒருபோதும் தயங்கியதில்லை.

தமிழுக்காகப் போராடிய பாவேந்தரின் தொடக்ககால எழுத்துக்களில் தனித்தமிழ் இல்லை. வந்து விழுந்த வடமொழிச் சொல்லாட்சிகளை அவரால் தவிர்க்க முடியவில்லை.

மயிலைப் பற்றிப்பாடும்போது

"சாயல் உன் தனிச்சொத்து

ஸபாஷ் கரகோஷம்"

என்று எழுதினார்.

கோகிலம் - கஜராஜ் - ஸரோஜா - ஸம்பாத்தியம் - நிஜம் - விஷம் என்றெல்லாம் வடசொல் ஆதிக்கம் கவிதையில் மிகுந்திருந்தது.

பன்மொழிப்புலவர் கா.அப்பாதுரையிடம் பேசிக் கொண்டிருந்தபோது மறைமலையடிகள் சொன்னாராம்:

"பாரதியும் கவிஞனில்லை; பாரதிதாசனும் கவிஞனில்லை"

"ஏன்?"

"இருவருமே வடசொற்களைக் கலந்து பாட்டெழுதுகிறார்கள்"

ஒருவன் கவிஞனா இல்லையா என்பதற்கு மறைமலையடிகள் அன்று வைத்திருந்த அளவுகோல் அதுதான்.

மறைமலையடிகளின் கருத்தை அப்பாதுரையார் பாரதிதாசனுக்குத் தெரிவித்த பிறகு அவர் படைத்த தனித்தமிழ்ப் போர்ப்பாட்டுதான் 'தமிழியக்கம்' என்று அறியக் கிடைக்கிறது.

"கனியிடை ஏறிய சுளையும் - முற்றல்
கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும் காய்ச்சுப்
பாகிடை ஏறிய ருசியும்"

என்று எழுதிப் பதிப்பித்தவர், இதில் 'ருசி' வேண்டாமே 'சுவை' என்றிருக்கலாமே என்ற பொன்னம்பலனார் கருத்தை ஏற்று அடுத்த பதிப்புகளில் 'பாகிடை ஏறிய சுவையும்' என்று மாற்றினாராம்.

இப்படிக் காலந்தோறும் தன்னைச் செதுக்கிச் செதுக்கி வளர்ந்திருக்கிறார் அந்தச் செம்மாந்த கவிஞர்.

சங்கம் மருவிய காலத்திலிருந்து தமிழ் மீது பிறமொழித் தாக்குதல் ஓயவேயில்லை. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலும் அது வெவ்வேறு வடிவங்களில் வினைப்பட்டுக்கொண்டிருந்தது. சமஸ்கிருதம் - இந்துஸ்தானி - இந்தி ஆகிய மொழிகளின் திட்டமிட்ட திணிப்பு நின்ற பாடில்லை.

கர்சன் பிரபு காலத்தில் நிகழ்ந்த ஒரு மொழிமோசடியை வரலாறு ஆழ்ந்து கவனிக்கத் தவறிவிட்டது. இந்தியா முழுமையும் உள்ள வடமொழி வாணர்கள் ஒன்றுகூடிப் பல்கலைக்கழகங்களில் மாநில மொழிகளையெல்லாம் நீக்கிவிட வேண்டும் என்றும், அந்த இடத்தில் சமஸ்கிருதம் மட்டுமே இடம்பெறச் சட்டமியற்ற வேண்டும் என்றும் திட்டவட்டத் தீர்மானமிட்டுச் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைத்தார்கள்.

சூரிய நாராயண சாஸ்திரி என்னும் பரிதிமாற் கலைஞரால் அந்த நச்சுத் தீர்மானம் கொழுந்திலேயே கிள்ளப்பட்டுக் குப்பையில் வீசப்பட்டது.

ராஜாஜி முதலமைச்சராய் வந்தபோது அதே நச்சுச்செடி அரசாங்கத் தண்ணீர் குடித்து இன்னோர் இலைவிட்டது. உயர்நிலைப் பள்ளிகளில் இந்தியைக் கட்டாயமாக்கும் அரசாணையை 21.04.1938இல் ராஜாஜி பிறப்பித்தார். தமிழின் தலைவாங்கப் பிறந்த அந்த அரசாணையை எதிர்த்து நாவலர் சோமசுந்தர பாரதியார் தலைமையில் 28.05.1938இல் இந்தி எதிர்ப்பு வாரியம் கட்டமைக்கப்பட்டது. தந்தை பெரியார் - கி.ஆ.பெ.விசுவநாதம் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்ட அந்த உயரமைப்பு இந்திக்கு எதிராகத் தெருவெல்லாம் தீ வளர்த்தது. அந்த நெருப்பின் கனலுக்கு நெய்யூற்றிய புலவனாகத்தான் பாவேந்தர் பாரதிதாசனை இனவரலாறு இப்போதும் நினைவு கூர்கிறது.

தாய்மொழியின் வீழ்ச்சி என்பது இனவியல் - நிலவியல் - வாழ்வியல் - பொருளாதாரவியல் - பண்பாட்டியல் என்ற அத்தனை வீழ்ச்சிகளுக்கும் அடிவீழ்ச்சியாகும் என்று தான்பெற்ற தெளிவைத் தமிழ்ச் சமுதாயத்திற்கு ஊட்டிய புலவன் என்று பாவேந்தரைச் சொல்லலாம்.

1926 வரை 'ஸ்ரீ மயிலம் சுப்ரமணியர் துதியமுது' பாடிக்கொண்டிருந்த வெறும் வித்வான், அடுத்த இரண்டே ஆண்டுகளில் ஒரு மகாகவியின் அடையாளங்களோடு அறியப்பெற்றார். காரணம் 1928இல் தான் பெரியார் - பாரதிதாசன் சந்திப்பு நிகழ்ந்தது. காலங்காலமாக இருந்த தமிழ் மரபு கவிதை வடிவத்தை அவருக்குக் கட்டமைத்துத் தந்திருந்தது. பாரதியாரின் பயிற்சி அவருக்குப் புதுநடையைப் போதித்திருந்தது. பெரியார் என்ற பேராளுமை, உள்ளடக்கத்தை அவர் நெஞ்சில் ஓதுவித்தது. இந்த மூன்று சிக்கிமுக்கிக் கற்களின் உரசலில் ஒரு யுகத்தீயின் சுடர் பற்றியது.

"நீரைப்போல் அண்ணாவும்; திண்மை கொண்ட
நிலத்தைப்போல் பெரியாரும்; கரிகாற் சோழன்
தேரைப்போல் அழகிரியும் இருந்த நாளில்
தீயைப்போல் பாவேந்தர் இருந்து வந்தார்

நேருக்கு நேராகப் பகைவர் தம்மை
நின்றெதிர்த்த பெருங்கவிஞர் தம்வாழ் நாளில்
ஆருக்கும் அஞ்சாமல் வாழ்ந்து வந்தார்
அவரேஎன் கவியாசான் அதங்கோட் டாசான்"

என்று உவமைக் கவிஞர் சுரதா தன் வீரிய விருத்தத்தில் உரைத்ததுபோல் அவர் அஞ்சாத ஆண்மையாளர் என்பதற்கு ஆதாரங்கள் நூறு காட்டலாம்.

நெஞ்சுக்குச் சரியென்று பட்டால் தம் கருத்தாசான் என்று கருதிய பெரியாரை எதிர்ப்பதற்குக் கூட அவர் தயங்கியதில்லை. பாவேந்தரின் சீடர்களுள் ஒருவரான மதுரை தனுஷ்கோடி ராஜூ என்பவர் உடனிருந்து கண்டெழுதிய காட்சி ஒன்றைச் சாட்சியாகப் பதிவுசெய்கிறேன் :

"விருதுநகரில் திருக்குறள் மாநாடு. பெரியார் பேசும்போது 'மற்ற இதிகாச புராணங்களைப் போலத் திருக்குறளும் மோசந்தான். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் காட்டுமிராண்டிக் காலத்தில் எழுதப்பட்ட இந்நூல் இந்தக் காலத்துக்குப் பொருந்தாது. இதுவும் தமிழுக்கு ஒவ்வாத நூலே' என்று பேசினார். பெரியாருக்குப் பின் பேச எழுந்த பாவேந்தர் பெரியார் பேச்சை மறுத்தார். லேசாகக் கூட்டத்தில் அதிருப்திக் குரலும் ஆரவாரமும் எழுந்தது".

தமிழில் ஒற்றுப் பிழையைக்கூடப் பொறுத்துக் கொள்ளவியலாத செம்மைவாதியாகத் திகழ்ந்தவர் பாவேந்தர். ஒரே ஓர் ஒற்றுப்பிழைக்காகத் தீப்பெட்டி கிழித்துத் தீப்பந்தம் கொளுத்திய நிகழ்வு அவர் வாழ்வில் நேர்ந்திருக்கிறது. அவர்தம் அணுக்கத் தொண்டர்களில் ஒருவரான இசைப்புலவர் மதிவாணன் எழுதிய கட்டுரை ஒன்று பாவேந்தரின் 'கொடுந்'தமிழ்ப்பற்றைக் கூறிப்போகிறது :

"ஒரு முறை இரண்டு வரிகொண்ட ஒரு பாடலை எழுதி அதை என் கடிதத்தாளில் அச்சிட்டு முதன் முறையாகப் பாவேந்தருக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தேன்.

அதற்குப் பாவேந்தரிடமிருந்து மறுமொழி வந்தது. 'உன் அஞ்சல் நன்று; உடன் அத்துணை அச்சுப்படிகளையும் எடுத்துவந்து சேருக' என்றிருந்தது. எல்லாக் கடிதத் தாள்களையும் கட்டிக்கொண்டு புதுவை போய்ச்சேர்ந்தேன். நான் வைத்திருந்த அத்துணை கடிதத் தாள்களையும் சுக்கு நூறாகக் கிழித்து இந்தா என்று தீப்பெட்டியை நீட்டினார்கள். ஏன் என்றேன்? இவற்றைக் கொளுத்து என்றார் பாவேந்தர். 'பாட்டைப்பார்! சந்திப்பிழையோடு பாட்டெழுதித் தமிழைச் சிதைத்திருக்கிறாய்.

'தாய்மொழி தமிழ்மொழி என்போம் - செப்பும்
தமிழை சிதையாது காப்போம்'

'ஐ' காரத்துக்குப் பிறகு ஒற்று மிகுமே. 'தமிழைச் சிதையாது காப்போம்' என்றல்லவா எழுத வேண்டும். ஒற்றுப் போடாமல் தமிழின் உயிரைக் கெடுத்திருப்பது மட்டுமல்லாமல் இதைப் பலரும் அறிய இவ்வளவு கடிதத் தாள்களில் ஏன் அச்சிட்டாய்?' என்று கூறி எழுந்துவிட்டார்."

இப்படிப் பிழைகளை எரித்த ஒரு பெரும்புலவன் வரலாற்று வீதியில் வந்துபோனதில்லை.

ஒரு மொழியின் சொற்களெல்லாம் முன்னோர்களின் மூளைக் குழந்தைகள். ஒவ்வொரு சொல்லும் அறிவை ஊற்றிவைத்த கொள்கலன். எந்த ஒரு மொழிக்கும் புதுச்சொற்களின் வரவு என்பது புதியதில்லை. ஆனால் வந்த சொல் இருந்த சொல்லை இடம்பெயர்த்து விடுவதுதான் மொழிக்கொள்ளை. வந்த சொல் வாழ்ந்து போனால் வருத்தமில்லை; ஆனால் இருந்த சொல்லைக் கொன்று விடுவதைத்தான் ஏற்கமுடியவில்லை.

'கற்பு' என்ற தமிழ்ப் பழஞ்சொல் வழக்கில் இருக்கிறது. இடையில் 'பதிவிரதம்' என்ற வடசொல் வந்து சேர்கிறது. நாளடைவில் கற்பென்ற சொல் கழிக்கப்பட்டு அவ்விடத்தில் பதிவிரதம் என்ற சொல் அமர்ந்துகொள்கிறது என்று வைத்துக்கொள்வோம். இங்குதான் நேர்ந்துவிடுகிறது வரலாற்று வழு. கற்பு என்ற சொல்லின் புழங்கு பொருளுக்கு இணையாகுமா பதிவிரதம்? பதிவிரதம் என்பது ஒரு பெண் தன் கணவனுக்கு உண்மையாக இருப்பது.

அது பெரிதும் பெண்பால் ஒழுக்கமாகப் பேணப்படுவது. ஆனால் கற்பு என்பது பெண்பால் ஒழுக்கம் மட்டுமின்றி இருபால் ஒழுக்கமாகப் போற்றப்பெறுவது. பெண்களை மட்டுமே அளாவும் ஒழுக்கம் பதிவிரதம். ஆனால் ஆண் - பெண் என்ற இருபாலையும் அளாவுவது கற்பு. கற்பென்ற ஒழுக்கத்தைத் தமிழ் இருபாலர்க்குச் சுட்டுகிறது; வடசொல் பெண்ணை மட்டுமே கட்டுப்படுத்துகிறது. கற்பென்ற சொல்லைப் பதிவிரதம் இடம் பெயர்த்து எப்படி ஈடுசெய்யும்? ஒரு சொல்லை மாற்றிப் புழங்குவதால் தமிழன் சிந்தித்து வைத்த பண்பாட்டு விழுமியமே அல்லவா பழுதாகிப்போகிறது! எனவேதான் தமிழைத் தடம்மாற்றிப் போடும் பிறமொழிக் கலப்பைத் தமிழர்கள் எதிர்க்கிறார்கள்.

பிறமொழிக் கலப்பு தமிழ்ச்சொல்லை எப்படித் தவிடுபொடி செய்கிறது என்பதை, கோவையில் 1950இல் மே 27, 28இல் நிகழ்ந்த முத்தமிழ் மாநாட்டில் ஓங்கி உரையாற்றினார் பாவேந்தர். சொல் மாறாமல் அவர் சொற்பொழிவை இங்கே பதிவு செய்கிறேன்:

"தமிழில் உள்ள பல தூய சொற்றொடர்கள் பிறமொழியாளரால் கவர்ந்து செல்லப்பட்டு உருமாறி வடசொல்லென்று நம்மிடையே திணிக்கப்படுவதும், அக்கூற்றினை ஏற்று இங்குள்ள முண்டங்கள் கூத்தாடுவதும் கொடுஞ்செயலாயிற்று. நிருத்தம் என்ற சொல் ஆடலைக் குறிக்கும். ஆடும்போது வெளியிடும் முத்திரைகள் உள்ளத்தின் கூறுகளை வெளிக்கொணர்ந்து நிறுத்திக்காட்டுவதால் 'நிறுத்தம்' என்று குறிக்கப்பட்டுப் பின் நிருத்தம் ஆயிற்று. கை, கண், வாய், மெய், முகம் ஆகியவற்றில் தன் அகக் குறிப்புகளைக் காட்டி நிறுத்துதல் இயல்புதானே! இத்தூய தமிழ்ச்சொல்லை 'நிர்த்தனம்' 'நர்த்தனம்' என்று பாழ்படுத்தி வடசொல்லாக மாற்றிக் கொண்டுவந்து கூறுவார் கூற்றைக் கேட்டுத் திரியும் தமிழ்த் தறுதலைகளை உதைத்தாலென்ன?" இப்படிச் சொன்னது மட்டுமன்று - தன் வாய்மொழியோடு உடல்மொழி கூட்டி எதிரிலிருந்த ஒலிபெருக்கியை எட்டி உதைத்தாராம் பாவேந்தர். அச்செயலை அநாகரிகம் என்றும் அவைமீறல் என்றும் இறந்த காலம் கருதியிருக்கலாம்.

ஆனால், அதை அறச்சீற்றம் என்றும் தமிழ்க் காதல் என்றும் நிகழ்காலம் கருதக்கூடும்.

கழிவறைக்குப் பக்கத்தில் உன் கால்செருப்பைத் தள்ளி வைத்தாலே கடுங்கோபம் கொள்கிறாயே, உன் மொழியை அப்படித் தகாத இடத்தில் தள்ளிவைத்தால் பொறுப்பாயா?

"காற்செருப்பைப் பிறனொருவன் கழிவிடத்தில் தள்ளிடினும்
பொறாத உள்ளம்
மேற்படுத்தும் எவற்றினுக்கும் மேற்பட்ட தன் மொழியைத்
தமிழைத் தீயோர்
போற்றுவதற்குரிய பொதுவினின்று நீக்கி வைத்தால்
பொறுப்பதுண்டோ?"

இந்த வினாவுக்குத் தமிழில் மட்டுமன்று எந்த மொழியிலும் எதிர்ப்பில்லை.

பாவேந்தர் கவிதைகளில் தென்படும் பரப்புரை நெடியும், ஆவேசத்தில் வந்துவிழும் அவையல் கிளவிகளும், கவிதைஅமைதி கடந்த வடிவ மீறல்களும் பாவேந்தர் ஓர் உயர்கவி அல்லர் என்ற விமர்சனத்தை அவர்மீது வீசிப்போனதுண்டு. அதை முற்றிலும் ஏற்றுக்கொள்ளவியலாது. கொள்கை மணக்கும் இலக்கியத்தில் கவிதையின் உடற்கூறுகளைவிட உள்ளக் கூறுகளே துய்க்கத் தக்கவை. கண்ணிலிருந்து வடியும் கண்ணீரோ காயத்திலிருந்து வடியும் குருதியோ கலையமைதியோடு சிந்தப்பட வேண்டும் என்றும் யாரும் சிந்திப்பதில்லை. பசித்த மக்களையும் எரியும் பிரச்சனைகளையும் நூற்றாண்டுகளாய் இழைக்கப்பட்ட அநீதிகளையும் கேள்வி கேட்க வந்த ஒரு கிளர்ச்சிப் புலவனை இலக்கணம் காட்டும் காவிய அமைதிகளோடு பொருத்திப் பார்ப்பது பொருந்தாது. அறச்சீற்றம் கொள்ளும்போது பிளிறும் களிறாகவும், அழகியல் பாடும்போது இழையும் தென்றலாகவும் அவன் உயிர் மாறிக்கொள்கிறான்.

'கொலை வாளினை எடடா மிகு - கொடியோர் செயல் அறவே' என்ற இடிச்சத்தம் அடங்குமுன்னே நிலாவைப் பாடும் குயில் சத்தமும் கேட்கிறது.

"வெள்ளித் தட்டே
விண்ணுக் கரசே
பிள்ளை முகமே
பேசுந் தமிழே
உள்ளக் களிப்பே
உலக விளக்கே
அள்ளிப் புரிந்தாய்
அழகு விருந்தே"

என்று இயற்கையைப் பாடும்போது இழையும் அழகியலைக் களம்பாடும் கவிகளிலும் காணவியலாது.

தமிழ் இலக்கியத்தில் ஆழ்ந்தவர்கள் உற்றாய்ந்து கற்றால் ஒன்றைக் கண்டறியலாம்.

தமிழ் இலக்கியங்கள் பெரும்பாலும் தன்னிலை ஒருமையிலும் முன்னிலையிலுமாகவே இயங்கி வந்திருக்கின்றன. சங்க இலக்கியங்களும், சமய இலக்கியங்களும் கூட இவற்றுக்கு முற்றிலும் விதிவிலக்கல்ல.

நின் - என் - உன் என்றுதான் பல பாடல்கள் பேசுகின்றன. பாரதிக்குப் பிறகுதான் தமிழ்க்கவிதை எங்கள் - எம் - யாம் என்று பாடத் தொடங்கியது.

"பொழுதெலாம் எங்கள் செல்வம்
கொள்ளை கொண்டு போகவோ?"
"எங்கள் பாரத தேசமென்று தோள்கொட்டுவோம்"

என்று பாரதி குரல் ஒலித்தது.

அதைத் தொடர்ந்து

"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு"

என்று பாவேந்தரின் பேரோசையாய் அதிர்ந்தது.

'என் - நின்' என்பன பெரும்பாலும் கடவுளோடு பேச. 'எங்கள் - யாம்' என்பன மக்களோடு பேச.

மக்களோடு பேசியவர் மக்களுக்காகப் பேசியவர் மாகவிஞர் பாவேந்தர்.

தாலாட்டு என்பது பழைய வடிவம்.

"சாணிக்குப் பொட்டிட்டுச் சாமியென்பார் செய்கைக்கு
நாணி உறங்கு நகைத்துநீ கண்ணுறங்கு"

என்று தொட்டிலுக்குள் பகுத்தறிவை விதைத்தது பாரதிதாசன் பாட்டு.

தாமரைத் தடாகம் என்பது பழைய படிமம்.

"தாமரைபூத்த தடாகங்களே - உமைத்
தந்தஅக் காலத்திலே - எங்கள்
தூய்மைச் சகோதரர் தூர்ந்து மறைந்ததைச்
சொல்லவோ இந்த ஞாலத்திலே"

என்று தாமரைப் பூவில் உழைக்கும் மக்களின் உள்ளங்கைச் சிவப்பைச் சிந்தித்தது பாவேந்தர் பாட்டு.

பகுத்தறிவு - சீர்திருத்தம் - காதல் - குடும்பம் - கலை - கல்வி - அரசியல் - மொழியியல் - அறவியல் - அறிவியல் - அழகியல் என்று வாழ்வின் அத்தனை வெளிகளையும் அளாவித் துழாவியது பாவேந்தரின் படைப்பு விறல் அல்லது விரல்.

பாவேந்தர் அரசியல் அறிந்தவர்; தேர்தலிலும் வென்றவர். ஆனால் அரசியலில் அவர் கரைந்துபோகவில்லை. பெருங்கவிஞர்கள் யாரும் அரசியலை வென்றெடுத்ததில்லை.

காரணம் கவிதை என்பது மறைத்ததைப் புலப்படுத்துவது. அரசியல் என்பது பெரும்பாலும் புலப்பட்டதை மறைப்பது. பாவேந்தர் மறைக்கக் கற்றுக்கொள்ளவில்லை.

திராவிட இயக்கத்தின் திரைப்பயணத்தைத் தொடங்கிவைத்த பெருமை பாவேந்தரையே சாரும். அண்ணா - கலைஞர் என்ற கலையாளுமைகளுக்கு முன்பே 'கவி உலகில் கீர்த்தி பெற்ற ஸ்ரீமான் புதுவை பாரதிதாசன் சித்தரித்த பாடல்கள்' என்ற அடைமொழியோடு பாலாமணி அல்லது பாக்தாத் திருடன் படத்தில் (1937) அறிமுகமானவர் பாவேந்தர்.

கவிதைத் துறையில் பெற்ற பெரும் வெற்றியை அவர் கலைத்துறையில் ஈட்டாமற் போயிருக்கலாம். ஆனால், திராவிட இயக்கம் கலைத்துறையில் இன்றுவரை பெற்றுத் துலங்கும் பெருமைக்கு நதிமூலமாகத் திகழும் நாயகர் பாவேந்தர்தான்.

திரைப்படத் துறையில் தன்னை அவர் தோய்த்துக் கொண்டார். இறுதியில் தேய்த்துக் கொண்டார்.

அதில் பொருளீட்டுவது அவருக்கு இரண்டாம் நோக்கம்தான். அந்த ஊடக வழியே தமிழ் பரப்புவதே முதல் நோக்கம்.

'பராசக்தி' படத்தின் தொடக்கப்பாடலாக "வாழ்க வாழ்கவே வளமார் எமது திராவிட நாடு" இடம் பெற வேண்டுமென்று அந்தப் படத்தின் உரையாடல் ஆசிரியர் கலைஞர் புதுவைக்குச் சென்று வேண்டியபோது, 'பணமே வேண்டாம்; பாட்டு இடம்பெற்றால் போதும்' என்று பெருமிதத்தோடு ஒப்புதல் தந்தவர் பாவேந்தர்.

அவர் கோபக்காரர் - பாயும் புலி - சீறும் சிங்கம் என்றெல்லாம் உருவகப்படுத்துவார்கள். பல நேரங்களில் அவர் குழந்தையாகவே இருந்திருக்கிறார் என்பதற்குப் பல நிகழ்வுகளைப் படித்தறிகிறேன்.

மாடர்ன் தியேட்டர்ஸில் அவர் வசனமெழுதிய 'சுலோசனா' என்ற படத்தின் படப்பிடிப்பு நடந்து கொண்டிருக்கிறது.

வருணன் - வாயு - இந்திரன் முதலியவர்களை இந்திரஜித் சிறைப்பிடிக்கிறான். பிரம்மதேவன் இலங்கை வந்து இராவணனை வேண்டுகிறான்.

“இராவணேஸ்வரா! என் பொருட்டாவது அமரேசனை விடுவித்து அளகாபுரியை அழியாமல் காப்பாற்ற வேண்டும்” என்று பாவேந்தர் வசனமெழுதியிருக்கிறார். அந்த வசனம்பேசி பிரம்மதேவனாக நடித்த தேவராஜநாயுடு கொஞ்சம் தமிழறிந்தவர். நடிப்பதை நிறுத்திவிட்டு “அய்யோ! அளகாபுரி குபேரன் தலைநகரமாயிற்றே... அமராவதிதானே இந்திரன் தலைநகரம்” என்று தயங்கி நின்றாராம்.

பாரதிதாசனை அவசரமாய் அழைத்துக்கேட்டதும் “ஆமய்யா... ஆமய்யா... நீ சொல்றது சரிய்யா...” என்று குழந்தைபோல் திருத்திக்கொடுத்தாராம்.

விமர்சனத்தை எதிர்கொள்வதற்கு ஆண்மை வேண்டும்; அதை ஏற்றுக்கொள்வதற்குப் பேராண்மை வேண்டும், அந்தப் பேராண்மை பெற்ற பெருங்கவிச் சிங்கம் பாரதிதாசன்.

முன்னுதாரணமற்ற படைப்புவெளிதான் முன்னுதாரணங்களை உண்டாக்குகிறது. பாவேந்தரின் படைப்புவெளி சுயமானது; முன்னொரு படைப்பாளியை நகல் செய்யாதது. 20ஆம் நூற்றாண்டின் இலக்கிய வடிவங்கள் அனைத்திலும் அவர் இயங்கினார் என்றாலும் அவர்தம் படைப்பிலக்கியங்களே கால விளிம்பைத்தாண்டி நிலைபெறுகின்றன.

- குடும்பம் என்ற அடிப்படை அலகுக்குள் கூட்டுச் சமுதாயத்தின் குறிக்கோள்களை உயர்த்திப்பிடித்த ‘குடும்ப விளக்கு’ -

- காப்பியத்தின் இயங்கியல் கூறுகளோடு காதலும் களமும் கண்ட ‘பாண்டியன் பரிசு’ -

● சிருங்காரம் சொட்டும் வடமொழி மூலத்தை வாங்கி அதைப் புரட்சிக் கவியாகக் காட்டிய சஞ்சீவ 'பர்வதத்தின் சாரல்' -

● பொன்முடி பூங்கோதை என்ற வணிகக்குடிக் காதலர்களின் துன்பியலைச் செவ்வியல் செய்த 'எதிர்பாராத முத்தம்' -

● சாதி மத பேதமற்ற தமிழ்ச் சமுதாயத்தைத் தொட்டுக்காட்டிய 'குறிஞ்சித்திட்டு' -

● சிலப்பதிகாரத்தைப் பகுத்தறிவுப் பார்வையோடு படைத்துக்காட்டிய 'கண்ணகி காப்பியம்' -

● மணிமேகலைக்குள் கலந்துபோன ஆரியக் கலாசாரத்தைக் களைந்து படைத்த 'மணிமேகலை வெண்பா' -

● கனல் மணக்கும் கட்டுரைகள், தமிழர் மீட்சி மாட்சி என்ற பெரும்பொருளில் இயங்கிய நாடகங்கள், திராவிடம் சுமந்து தீப்பிடித்த கவிதைகள்

என்று பரந்து விரிந்த படைப்புலகம் பாவேந்தருடையது.

இல்லையெனில் 1928இல் புரட்சிக்கவி நாடக ஒத்திகையில் பெரியார் இப்படிப் பேசியிருக்க மாட்டார்: "இன்று இந்த நாட்டில் தமிழும் தமிழ்க் கவியும் தமிழ் இசையும் தமிழர்களுடைய முன்னேற்றத்துக்கும் தன்மானத்துக்கும் பயன்படும்படி மக்கள் உணர உழைக்க ஏற்ற கவிகள் செய்து மக்களை ஊக்குவிக்க அவர் (பாரதிதாசன்) ஒருவரே என் கண்ணுக்குத் தென்படுகிறார்".

பெரியாரின் சொற்கள் பிழையற்ற மொழியில் சிந்தப்பட்ட முத்துக்கள்.

அந்நாள் முதலமைச்சர் கலைஞர் தலைமையில் அமைச்சர்களும் தமிழறிஞர்களுமாய் ஓர் ஆலோசனைக் கூட்டம்; நானுமிருந்தேன்.

பாவேந்தர் புதைக்கப்பட்ட இடத்தை நினைவுச்சின்னமாக மாற்ற இயலாதா என்ற கேள்வியொன்று முன்வைக்கப்பட்டது.

மிகுந்த சோகத்தோடு முதலமைச்சர் உதடு பிதுக்கினார். பாரதிதாசனின் காதலர் அவர். பாவேந்தர் படைப்புகளை நாட்டுடைமையாக்கியவரும் அவர்தான்.

'என்ன தயக்கம்?' என்று கேட்டேன்.

"பொது இடுகாட்டில் பத்தோடு பதினொன்றாய்ப் புதைக்கப்பட்டுவிட்டார் பாவேந்தர். அந்த இடத்தில் மண்டபத்திற்கு வசதியில்லை; அங்கு தூய்மையும் இல்லை" என்றார் வருத்தத்தோடு.

பாவேந்தரின் இடுகுழி மட்டுமா தூய்மையாக இல்லை?

தமிழ்...? தமிழ் உணர்வு...? தமிழர் மேம்பாடு...? எதில் இன்று தூய்மையிருக்கிறது?

அதிகார மையங்களில் - ஆலயங்களில் - நீதி மன்றங்களில் - கல்விக் கூடங்களில் - கலை ஊடகங்களில் - பத்திரிகைகளில் - வானொலிகளில் - தொலைக்காட்சிகளில் - சமூக வலைத்தளங்களில் தமிழுக்கான இடம் தார்மீகமாகவும் அதிகாரபூர்வமாகவும் என்று உறுதிப்படுத்தப்படுகிறதோ அன்றுதான் பாரதிதாசன் மீண்டும் விழித்தெழுவார்.

ஒரு கவிஞன் எங்கே புதைக்கப்பட்டான் என்பது பெரிதில்லை; எப்போது முளைத்தெழுந்தான் என்பதே பெரிது.

●